இருக்கிறது. ஏற்கனவே, தஞ்சை நகரில் மன்னார்குடி, கும்பகோணம், திருவாரூர், மயிலாடுதுறை போன்ற நகரப் பகுதிகளை உள்ளடக்கி ஒரு பிரிவு உருவாக்குவதற்கு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆகவே, தற்போது சாத்தியக்கூறு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **வினா எண் 16. திரு. ஆ. கு.** சீனிவாசன், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

16—

தாலுகா பகுதியில் தொழிற்பேட்டை அமைத்தல்.

* 3585—**திரு. ஆ. கு. சீனிவாசன் :**

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமங்களில் போதுமான வேலைவாய்ப்பு இல்லாததால் பல இளைஞர்கள் வேலை வாய்ப்பு கருதி நகரங்களுக்குச் செல்வதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனை தடுக்க தாலுகா, பிர்க்கா பகுதியில் தொழிற்பேட்டை உருவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. முஹம்மது ஆசிப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டில் தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கு, அதற்கான போதிய விண்ணப்பங்கள் அல்லது கோரிக்கைகள் மாவட்ட தொழில் மையத்தின் மூலம் பெறப்படின் அதனை ஆராய்ந்து தக்க தொழிற்பேட்டைகளை சிட்கோ நிறுவனம் அமைக்கும்.

திரு. ஆ. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் பெரணமல்லூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியில் எந்தவித வசதியும் இல்லாமல் இன்னும் பின் தங்கியிருக்கின்ற காரணத்தால் எங்கள் பகுதிக்கு சென்ற பட்ஜெட்டில் அடிப்படை வசதி...

1992 ஜனவரி 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சீனிவாசன், பொதுவாக தொழிற்பேட்டை ஆரம்பிப்பது பற்றி கேள்வி கேட்டிருக்கிறீர்கள். இப்போது உங்கள் தொகுதிக்கு என்று கேட்டால் அவரிடம் பதில் இருக்காது. இந்த கேள்வியை ஒட்டி துணைக் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆ. கு. சீனிவாசன்: தலைவர் அவர்களே, பின்தங்கி யிருக்கின்ற எல்லா தொகுதிக்கும் வரும் என்ற காரணத்தால் கேட்கின்றேன். எங்கள் தொகுதியில் இந்த வாய்ப்புக்கு சிட்கோ நிறுவனத்தார் வந்து பார்வையிட்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்கள் ஆரவாரத்தோடு இருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்கெனவே வந்த தொகுதி. ஆகவே அங்குள்ள மக்கள் எல்லோரும் ஆரவாரத்தோடு இங்கும் அங்கும் கொண்டு சென்ற இடங்களைக் காட்டியிருக்கிறார்கள். இந்த ஆண்டிலாவது அந்த தொழிற்பேட்டையை ஆரம்பிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. முஹம்மது ஆசிப்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இதுபற்றி தனிக் கேள்வி போடவும். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 17. திரு. பி. வி. இராஜேந்திரன். மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

17—

குழந்தைகள் காப்பகத்தில் உடற்பயிற்சி அளித்தல்.

* 5356—திரு. பி. வி. இராஜேந்திரன்:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) குழந்தைகள் காப்பகத்தில் குழந்தைப் பருவத்திலிருந்தே உடற்பயிற்சி அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?